தமிழ் நாடு சட்டமன்றம்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்றத்தின் நாற்பத்தி இரண்டாவது கூட்டத்தொடர்

புதன்கிழமை, 1972 ஆகஸ்டு 9.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற மண்டபத்தில், பிற்பகல் 4 மணி அளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் (திரு. சி.பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. இரங்கற் குறிப்பு

ஒருங்கிணைந்த தமிழ்நாடு முன்னாள் அமைச்சர் திரு. எச். சீதாராம ரெட்டி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் முன்னாள் அமைச்சரான திரு. எச். சீதாராம ரெட்டி அவர்கள் சேலத்தில் 1972, ஏப்ரல் 21-ஆம் நாள் இயற்கையெய்திய செய்தியை வருத்தத்துடன் இமமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எச். சீதாராம ரெட்டி அவர்கள் 1936 முதல் சட்டப் பேரவை உறுப்பினராகவும், 1947-52-இல் நிலவரி, தொழில் அமைச்சராகவும் பணியாற்றினர். 1952-53-இல் மக்கள் பேரவை உறுப்பினராகவும் அவர் இருந்தார்.

அவரை இழந்து நிற்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு இம்மன்றத்தின் சார்பாக நம்முடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வோம்.

இயற்கையெய்திய திரு. எச். சீதாராம ரெட்டி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மௌனமாக நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் எல்லோரும் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Provident Fund Deposits

*1. *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether Teachers' Provident Fund Deposits of teachers in aided High Schools have been permitted to be invested in State Government Loan Bonds;

(b) if so, whether any income-tax deductions are made from out of the annual interest paid; and

(c) whether the net interest is paid direct to the subscribers or reinvested in the Teachers' Provident Fund Accounts concerned?

வருங்கால வைப்பு நிதி

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரிகிற ஆசிரியர்கள், தங்களது வருங்கால வைப்பு நிதியில் வைத்துள்ள பணத்தை மாநில அரசுக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளனரா?

(இ) ஆமெனில், செலுத்தப்படும் ஆண்டு வட்டியிலிருந்து வருமான வரிக்கான தொகைகள் ஏதேனும் கழித்துக்கொள்ளப்படுகின்றதா?

(உ) நிகரவட்டி நேரடியாக சந்தாதாரர்களுக்குக் கொடுக்கப்படுகிறதா அல்லது சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் மீண்டும் முதலீடு செய்யப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள ஒரு ஆசிரியரின் இம்மாதிரி வேண்டுகோளுக்கிணங்க அவருடைய பிராவிடண்ட் பண்டு நிதியிலிருந்து அரசாங்கக் கடன் பத்திரத்திற்கு அவர்கள் ஈடு செய்ததாகவும், அதற்கு வருமான வரியைக் கழித்துக்கொண்டு கிடைக்கக்கூடிய வட்டி மாத்திரம் அந்த ஆசிரியருக்கு நேராகக் கிடைத்ததாகவும் தகவல் வந்ததா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1923-ம் ஆண்டில் இதற்கான விதிமுறைகள் எல்லாம் வகுக்கப்பட்டன. அதிலே இந்திய அரசாங்கத்தின் லோன், செக்யூரிடி ஆகியவற்றிலே அவர்கள் போடலாம் என்று இருக்கிறது. ஆனால் மாநிலத்தினுடைய கடன்கள், செக்யூரிடிகள் ஆகியவற்றில் போடுவதற்கு இப்போதிருக்கிற விதிமுறைகள் இடம் கொடுக்கவில்லை. விதிகள் மாற்றப்பட வேண்டும். அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட கொள்கையை ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைக்குக் கொண்டுவருகிறபோது, அதற்கான தன்மைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். இப்போதிருக்கிற நிலைமையில் சேவிங்ஸ் பாங்கில்தான் அதைப் போடும் முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

1972 ஆகஸ்டு 9]

திரு. எம். ராஜா அய்யர் : இந்த வருங்கால வைப்பு விதிகள் எல்லாம் பழங் காலத்தில் நிர்ணயிக்கப்பட்டவை. இக்காலத்திற்கு முற்றிலும் ஒவ்வாதவை களாக இருக்கின்றன. அரசாங்கப் பள்ளிக்கூடங்களின் ஆசிரியர்கள் என்றும், டிஸ்டிரிக்ட் போர்டு பள்ளிகளின் ஆசிரியர்கள் என்றும், மானியம் பெறும் பள்ளி களின் ஆசிரியர்கள் என்றும் தனித்தனியாக அதற்கு சட்டதிட்டங்கள் இன்னும் தேவைதானு? அவைகளைச் சீராக்கி ஒரே வகையான விதிகளாக அமைப்பதற்கு அரசாங்கத்திற்கு நோக்கமுண்டா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுதான் இப்போது ஆராயப் பட்டு வருகிறது.

"The question of amending the T.P.F. Rules to make provision for such investment was accepted in principle. But, the Accountant-General, Madras, raised certain clarifications, considering the difficulties that may arise in paying interest on the investments in respect of those teachers, whose income is assessable under the Income-Tax Act. This question is being examined *inter alia* in consultation with the Director of School Education."

ஆகவே இது ஆராயப்பட்ட பிறகு முடிவு எடுக்கப்படும்.

Benefits for the non-teaching staff.

* 2. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the various benefits for aided school teachers as announced in the budget speech for 1970-71 apply to the non-teaching staff in aided institutions; and

(*b*) if not, the reasons therefor ?

ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு நலன்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1970-71 வரவு செலவுத் திட்ட உரையின்போது அறிவித்த மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கான பல்வேறு நலன்கள் மானியம் பெறும் நிறு வனங்களின் ஆசிரியரல்லாத பணியாளருக்கும் பொருந்துமா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?